சிறுசேரிப் பகுதியில் இன்றையதினம் தொழில்நுட்ப நிறுவனங்கள் ஏராளமாக வந்துகொண்டிருப்பதை மனதிலேகொண்டு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே கடந்த மாதம் அந்தச் சாலை முழுவதும் சுற்றிப் பார்த்து, இன்னும் என்னென்ன வசதிகள் செய்து தர வேண்டும் என்பதை அதிகாரிகளோடு ஆய்வு செய்து, அந்தப் பகுதியின் தொழில்நுட்ப வளர்ச்சிக்காக அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, தொழில்நுட்ப நிறுவனங்கள் ஏராளமாக வந்துகொண்டிருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த ஆலோசனையை மின் வாரியம் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்ரமணியன்.

திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, மாத்தூர் பகுதியில் நிறையத் தொழிற்கூடங்கள் உள்ளன. நல்லூரிலுள்ள துணை மின் நிலையம் 110 கே.வி. திறன்கொண்டது. நிறையத் தொழிற்சாலைகள் உள்ளதால், அங்கே அடிக்கடி மின் தடை ஏற்படுகிறது எனப் பொது மக்களும், அங்குள்ள தொழில் அதிபர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அங்கு அதிகப்படியான திறன்கொண்ட ஒரு கூடுதல் துணை மின் நிலையத்தை அரசு அமைத்துக் கொடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையிலே அமைந்துள்ள தொழிற்பேட்டையில் மின் தடை ஏற்படுவதாகவோ அல்லது அங்கே இருக்கக்கூடிய தொழில் அதிபர்களுக்கு மின்சாரப் பற்றாக்குறை என்ற குறைபாடு வந்ததாகவோ இதுவரை அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அது குறித்து விவரமாக எழுத்துமூலமாகத் தெரிவிப்பார்களேயானால், அதிகாரிகளோடு கலந்து பேசி, அங்கிருக்கக்கூடிய மின் திறனை அதிகப்படுத்துவதற்கு அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

2007 ஏப்ரல் 10]

33—

கால்வாய்த் திட்டம்

***2001—திருமதி ராணி வெங்கடேசன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளம் தொகுதி, மருதூர் மேலக்காலில் முத்தாலங்குறிச்சி தனிக் கால்வாய்த் திட்டம் நிறைவேற்றப்படுமா?

முற்பகல் 9-40

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்: பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது தேவை எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன்.

திருமதி ராணி வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் தொகுதியிலுள்ள மருதூர் மேலக்காலிலிருந்து 8 கி.மீ. தூரத்தில் முத்தாலங்குறிச்சி குளம் உள்ளது. இந்த 8 கி.மீ. தூரத்திலும், படுக்கையூர், முரப்பநாடு, ஆழிக்குடி, பக்கப்பட்டி ஆகிய கிராமங்கள் உள்ளன. அங்கு 500 ஏக்கர் நிலங்கள் பாசன நிலங்களாக உள்ளதால், அங்கு தண்ணீர் சென்ற பிறகுதான், முத்தாலங்குறிச்சிக்கு வருகிறது. ஆகையால், 1997 ஆம் ஆண்டு பொதுப் பணித் துறை ஆய்வு செய்து, அனவரதநல்லூரில் 2 கி.மீ. தூரம் வரை கால்வாய் வெட்டி, முத்தாலங்குறிச்சிக்கு நேரடியாகத் தண்ணீர் கொண்டு வருவதற்காக 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தயார் செய்து, அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பிறகு அந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளது. மீண்டும் அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், 750 ஏக்கருக்கு மேலான நிலங்கள் பயனடையும் என்பதைப் பணிவோடு கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையின் சார்பில் அப்படி ஆய்வு செய்யப்பட்டது உண்மை. தாமிரபரணியிலே உள்ள 8 அணைக்கட்டுகளிலே, 7-வது அணைக்கட்டு மருதூர் அணைக்கட்டு. மருதூர்

அணைக்கட்டினுடைய வலதுபுறத்திலிருந்து மேலக்கால் வரை, அந்த மேலக்காலிலே 4-வது மடையிலேயிருந்து ஒரு கால்வாய் பிரிந்து செல்கிறது. அது முக்கவர் என்ற கால்வாய். அந்தக் கால்வாயின்மூலமாகத்தான் முத்தாலங்குறிச்சிக்குத் தண்ணீர் போய்க்கொண்டிருக்கிறது. ஆனால், அதிலே 15 மடைகள் இருக்கிற காரணத்தால், கடைசியில் இருக்கிற முத்தாலங்குறிச்சிக்குத் தண்ணீர் போகவில்லை என்பதற்காக, மேலக்காலிலே 15, 16-வது மடைக்கு இடையே நேராக ஒரு கால்வாய் வெட்டி, தண்ணீர் கொண்டு போக வேண்டும் என்று பொதுப் பணித் துறை ஆய்ந்தது. ஆனால், அந்தக் கால்வாய் வெட்டுகிற பகுதியிலே வசவப்பபுரம், ஆழிக்குடி போன்ற பகுதிகள் இருக்கின்றன. அவையெல்லாம் இரு போக நஞ்சை நிலங்கள்; அவர்கள் தர மறுத்துவிட்டார்கள். ஆகையினாலே, ஏற்கெனவே இருக்கிற அந்த முக்கவர் கால்வாயைச் சீர்படுத்தியிருக்கிறோம். உலக வங்கியின் 2-வது பிரிவிலே lining செய்யப்பட்டிருக்கிறது; 3½ இலட்சம் ரூபாய்க்குத் தூர் வாரப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம்விட, அந்தக் கால்வாயை வெட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஒப்புதலும் கிடைக்கவில்லை. ஊர் மக்களின் எதிர்ப்பு இருக்கிற காரணத்தால், புதிய கால்வாய் வெட்டுவதைவிட, இருக்கிற கால்வாயைச் செப்பனிட்டுத் தந்தால், தண்ணீர் போவதற்கு வழி உண்டாகும் என்ற முடிவுக்குப் பொதுப் பணித் துறை வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன்.

திருமதி ராணி வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதியைப் பற்றி நன்கு அறிந்தவர் நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர். எங்கள் தொகுதி, விவசாயத்தையே நம்பியிருக்கிறது. விவசாயத் தொழிலுக்கு வேண்டிய இந்தப் பாசனத் திட்டத்தை மறுபரிசீலனை செய்து, எங்களுக்குச் செய்து தர வேணடுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமக்கு அளிக்கப்பட்ட காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பிலே, தமிழ்நாட்டின் பாசனம் முழுவதும், நெல் பயிரிடுவதாகவும், பாசனக் காலம் . . .

2007 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாதது.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: முக்கியமான கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, உட்காருங்கள்.

வினா எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்.பி. தர்மலிங்கம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைசசர் அவர்கள்.

34—

கட்டட வசதி

***11106—திரு. எல்.பி. தர்மலிங்கம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்தியமங்கலம் சார் பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சத்தியமங்கலம் சார் பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு ஆணை வெளியிடப்பட்டு, கட்டடப் பணி 31-5-2007-க்குள் முடிக்கப்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்.பி. தர்மலிங்கம், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூரிலே இருக்கின்ற பதிவுத் துறை அலுவலகம் மிகக் குறுகிய, சிறிய கட்டடத்திலே இயங்கி வருகிறது. அதைப் புதிய கட்டடமாக இந்த ஆண்டு கட்டித் தர அமைச்சர் முன்வருவாரா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை